RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s-22233

OPEN ACCESS

# கணபதிராமன் படைப்புகளில் தெய்வ வழிபாட்டு மரபுகள்

**க. மகாலட்சுமி [அ, *], இ. சகாயமேரி [அ]**

[அ] தமிழ் உயராய்வு மையம், ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரி, காந்தி நகர், திருநெல்வேலி-627008, தமிழ்நாடு, இந்தியா

# Deity worship in Ganapathiraman's works

**G. Mahalakshmi [a, *], I. Sahayamary [a]**

[a] Department of Tamil, Rani Anna Government College for women, Tirunelveli-627008, Tamil Nadu, India

* Corresponding Author: mahalakshmiprasad403@gmail.com

Received: 27.09.2022
Revised: 02-11-2022
Accepted: 06-11-2022
Published: 01-12-2022

## ABSTRACT

Man has undergone various development since he appeared in the world. When man thought about the environment he lived in, about himself, the thoughts about the appearance of the world, the appearance of life, birth and death he understood that there is something beyond man's power and that is God. He began to think about it deeply with nature and as a result worship of God arose based on feelings of fear, struggle and gratitude. The worship that emerged thus tended to worship nature first and then from first sense to sixth sense things. In this case, the Tamil community divided land and time according to the environment they lived in and created a mythology that predicts life and worshiped different deities. Then they built temple for these deities, followed proper rituals and worshipped them.

**Keywords:** Worship, Deities, Tamil Community, God

## முன்னுரை

வழிபாடு செய்யும் ஒவ்வொரு குழுவும் வெவ்வேறுபட்ட தனித்தனி நடத்தைகளையும், நம்பிக்கைகளையும் பூசாரிகளையும் கொண்டிருக்கிறார்கள். இயற்கையியந்த சக்தியின் மீது நம்பிக்கையும் பக்தியும் கொண்டு புனிதமான நடத்தைகளில் மக்கள் குழுவினர் ஈடுபடும்போதுதான் வழிபாடு தோன்றுகிறது. ஒவ்வொரு சமயமும் ஒவ்வொரு வழிபாட்டு பண்புகள் சிலவற்றைக் அடிபடையகக் கொண்டுள்ளது. ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தெய்வங்கள், ஆவிகள், பூதங்கள், ஆன்மாக்கள், தற்சார்புடைய சக்தி அல்லது தற்சார்பற்ற சக்தியைக் கொண்டுள்ளது. இவற்றோடு ஒவ்வொரு வழிபாடும் குறிப்பிட்ட சில பொருட்களுக்கு சில இடங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கிறது. தமிழகமெங்கும் வாழும் மக்கள் ஒரு படித்தான ஒரு பண்பாட்டைச் சார்ந்தவர்கள் கிடையாது. ஒரே மொழி பேசினாலும் ஒரே தன்மையினர் அல்லர். இவர்கள் சாதியாலும் பல்வேறு உட்குழுக்களாலும் வேறுபட்டுக் காணப்படுகின்றார்கள். இதனைப் போன்று ஒரு தெய்வம் தமிழகமெங்கும் ஒரே மாதிரியாக வழிபடப்படுவதில்லை இதனைப் போன்று பேராசிரியர்.கணபதிராமன் படைப்புகளில் திருநெல்வேலிப் பகுதியில் சிறு தெய்வங்கள் பற்றிய வழிபாட்டு மரபுகளைக் கூறும் வகையில் இக்கட்டுரை அமைகின்றது. இவை பற்றி பின்வருமாறு விரிவாகக் காண்போம். வழிபாடு - சொற்பொருள் விளக்கம்:

வழி - இறைப் போற்றுதலுக்குரிய வழி, பாடு - அடைவதற்குரிய செயல்முறைகள்.

“இறைப்போற்றுதலுக்குரிய வழியை அடைவதற்கு மனிதன் மேற்கொள்ளும் செயல்முறைகளே “வழிபாடு” எனப்படும் (Tamilarasi, 2001). எல்லா மதங்களிலும் வழிபாடு என்பது இறைவனுக்கும்

மனிதனுக்குமிடையே ஒரு தொடர்பினை ஏற்படுத்துகிறது. தெய்வங்களுக்குப் பக்திச் சிரத்தையுடன் நடத்தப்படும் அனைத்துச் செயல்பாடுகளும் "வழிபாடு" என்பதாகும்.

வழிபாடு - அகராதிகள் தரும் விளக்கம்:

"வெள்ளிவிழா தமிழ்ப் பேரகராதி - அப்பியாசம், ஆராதனை, தாழ்மை, வணக்கம், வழிபடல்" (சங்கரலிங்க முதலியார், 1985) என வழிபாடு என்பதற்கு விளக்கம் தருகிறது.

"செந்தமிழ் அகராதி - வணக்கம்" என விளக்கம் தருகிறது (Kandhaiya, 2009).

"அகராதி நிகண்டு - பூசனை" (Nagasamy, 1983) என்று விளக்கம் தருகின்றது.

"வழிபாடு என்னும் சொல் பன்முகப் பொருள்களை தன்னுள் கொண்டது. இச்சொல்லுக்கு வழியிற்செல்லுகை, பின்பற்றுகை, பூசனை, சமயக் கோட்பாடு என்று கழகத் தமிழ் அகராதி" கூறுகின்றது.

## தெய்வ வழிபாட்டின் தோற்றம்

"சிறுதெய்வ வழிப்பாட்டின் தோற்றம் பழம் பொருளாகவே உள்ளது. உணவுப் பொருட்களை மட்டுமே தேடி வாழ்ந்த பழங்கால மனிதனுக்கு மனம் என்று விழிப்புணர்வு கொண்டதோ அன்றுமுதல் அவனுக்கு இறை நாட்டம் தொடங்கிவிட்டது" (Alex Comfort, 1966). இயற்கையோடு இயைந்து இயற்கையினின்று தன் தேவைகளைப் பெற்று வாழ்ந்த மனிதன் விழிப்புணர்வு பெற்றதும் இயற்கையை உற்றுநோக்கத் தொடங்கினான்.அப்போதுதான் வியப்பையும், மகிழ்வையும் நன்றியுணர்வையும் பெற்றான். தன்னை வாழ்விக்கும் இயற்கையை வாழ்த்தத் தலைப்பட்டான். நீரையும், மலையையும், ஞாயிற்றையும் தனது வாழ்வுக்குத் துணையாகும். பிற இயற்கைச் சக்தியையும் உள்ளத்தின் நிறைவோடு மனிதன் எண்ணிப் பார்த்தான். உள்ளநிறைவோடு தன்னை வாழ்விக்கும் இயற்கையை எண்ணிப் பார்த்த மனிதன் அந்த இயற்கை பொய்த்தபோது கலங்கினான். தனக்கு இயற்கையால் வரும் பாதிப்பையும் மரணத்தையும் அறிந்து தனக்குள் போராடினான். தன் ஆற்றலுக்கு மீறிய ஏதோ ஒரு பேராற்றல் தன்னை ஆட்டுவிப்பிதை உணர்வு மூலமாகவும் பட்டறிவு மூலமாகவும் தெரிந்த மனிதன் அமைதி வேண்டி அந்தப் பேராற்றலிடமே அடைக்கலம் புகுந்தான். இவையே மனிதன் அறிந்து தெய்வ வழிபாடு என்பதாகும்.

## தமிழ் சமுதாயத்தில் தெய்வ வழிபாடு

அச்சம், போராட்டம், நன்றியுணர்வு போன்றவற்றின் அடிப்படையில் மனிதன் உருவாக்கிக் கொண்ட கடவுள் கொள்கை தமிழ்ச் சமுதாய அளவிலும் தோன்றி வளர்ந்து இன்றியமையாத் தன்மையும் பெறுவதாயிற்று. தெய்வத்தைத் தொல்காப்பியம் கருப்பொருளின் வரிசையில் முன்னதாக வைத்திருப்பது குறிப்பிடத்தக்கது. பறவைகள், விலங்குகள், தாவரங்கள் போலவே அந்தந்த நிலங்களுக்குரிய தெய்வங்களையும் அவற்றிலிருந்து பிரிக்க இயலாதவாறு அமைத்துள்ளனர். நிலத்திற்கேற்ற தொழிலும் உணவும் இயற்கையாக அமைவது போலவே அந்நிலத்துத் தெய்வ வழிபாடும் இயல்பாக அமைந்துள்ளது இம்முறையில்தான்,

"மாயோன் மேய காடுறை உலகமும்

சேயோன் மேய மைவரை உலகமும்

வேந்தன் மேய தீம்புனல் உலகமும்

வருணன் மேய பெருமணல் உலகமும்" (Gowmareeswari, 2005)

என்று தொல்காப்பியம் திணைத் தெய்வங்களை வகுத்துக் கூறியுள்ளது. முல்லைத் திருமாலும், குறிஞ்சி முருகனும், மருத வேந்தனும், நெய்தல் வருணனும், பாலைக் கொற்றவையும் திணைத் தெய்வங்களாகும்.

## கணபதிராமன் படைப்புகளில் வழிபாடு

பேராசிரியர்.கணபதிராமன் படைப்புகளில் தெய்வ வழிபாடு பற்றிக் கூறும் பொழுது இவர் திருநெல்வேலி மற்றும் அதனைச் சார்ந்த அதன் அருகில் உள்ள பகுதியில் உள்ள தெய்வங்களைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். இவற்றில் ஆண் தெய்வம், பெண் தெய்வம் பற்றிய வழிபாட்டு முறைகள் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

## தாய் தெய்வ வழிபாடு

தெய்வ வழிபாட்டில் தாய்த் தெய்வ வழிபாடு தொன்மையானது. பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் மக்கள் பெண் தெய்வத்தை வணங்கி வந்தனர் என்பதை மொகஞ்சதோரா, ஹரப்பா போன்ற இடங்களில் கிடைத்த அகழ்வாரய்ச்சிகள் உறுதிப்படுத்துகின்றன. பெரும்பாலான தாய்த் தெய்வங்களை மக்கள் சிறுதெய்வங்கள் நிலையிலேயே வழிபட்டு வருகின்றனர். தாய் தெய்வங்கள் தனிநிலையிலும் வணங்கப் பெற்று வருகின்றன. தனிநிலையில் காளி, மாரி, இசக்கி போன்ற தெய்வங்களும் குழுநிலையில் ஏழு கன்னிமார் என்ற சப்த கன்னியர் போன்ற தெய்வங்களும் வணங்கப் பெற்று வருகின்றன. தாய் தெய்வங்களை வழிபட்டால் இல்லற வாழ்வு செழிக்கப் பிள்ளைவரம் பெறலாம். சமுதாய வாழ்வில் அச்சமின்றி வாழப் பகைவரை வெற்றி கொள்ளலாம். நீர்வளம் பெருகி உணவும், உறையும் பெற்று வாழலாம் என்று நம்பும் மக்களின் நம்பிக்கை புலனாகிறது. மேலும், தாய்த் தெய்வ வழிபாட்டில் அச்ச நீக்கமும் வளம்பெறு ஆக்கமும் வெளிப்படுவதைக் காணமுடிமிறது.

### காளி

மக்கள் தெய்வமாக வணங்கப்பெறும் காளி திருநெல்வேலிப் பகுதியில் சிறுபீடம் அமைத்து அதில் மஞ்சள், குங்குமம் பூசிப் பிரம்பினைப் பீடத்தில் சார்த்தி அதனை காளி என்று வணங்குகின்றனர். இப்பகுதியில் காளிக்கு கற்சிலை அமைத்து வழிபடும் முறையும் உண்டு. இவ்வாறு கற்சிலை அமைக்கும்போது நான்கு கைகள் அமைக்கப்பெற்றிருக்கும். நான்கு கைகளில் சூலம், கத்தி, கேடயம், கபாலம் ஆகியவற்றைக் கொண்டும் காளியின் திருவடியில் அசுரனைக் கிடத்திச் சூலத்தை மார்பில் அழுத்தியும் வடிவங்கள் அமைந்திருக்கிறது.

திருநெல்வேலிப் பகுதியில் காளியம்மன் மக்களை நோய் நொடியிலிருந்து காக்கும் காவல் தெய்வமாகக் கருதப்படுவதுடன் பிள்ளைவரம் தந்திடும் பெற்றியளாகவும் போற்றப்படுகிறாள்.

இதைப் பற்றிய நாட்டுப்பாடல்,

"காளியம்மன் கோயிலிலே
கால்சடைய நிற்கும்போது
காளியம்மன் மனமிரங்கிக்
கனத்த வரம் தந்தாலே
திருநீறு தந்தா சிந்திப்போகும்
என்று சொல்லத்
தேசமாளப் பிள்ளை வரம் தந்தாளே" (Vanamamalai, 1964)

என்ற பாடல் காளி பிள்ளைவரம் தருவதைக் குறிப்பிடுகிறது.

### ஆயிரத்தம்மன்

நான்கு கரங்களோடும் சிறிது சாய்ந்த தலையோடும் சினம் பொங்கும் முகத்தோடும் இடது காலால் மகிடனை மிதித்தும், வலது காலைக் குத்துக் காலாகக் கொண்டும் ஆயிரத்தம்மனுக்குத்

திருநெல்வேலிப் பகுதியில் சிலையமைத்துள்ளனர். நான்கு கைகளிலும் இவ்வம்மன் சூலம், உடுக்கை, கப்பரை, பாசம் கொண்டிருக்கும். இவ்வம்மனுக்கு ஆயிரம் கண்கள் இருப்பதால் ஆயிரத்தம்மன் என்ற பெயரைப் பெற்றாளாம்.

திருநெல்வேலிப் பகுதியிலுள்ள கங்கை கொண்டான், பாளையங்கோட்டை, பத்தமடை, பழவூர், சிங்கிகுளம், மானூர், முத்தூர் ஆகிய எட்டு ஊர்களில் மட்டுமே ஆயிரத்தம்மன் உண்டு என்றும் அவற்றுள் தலைமையானது கங்கைகொண்டான் அம்மையே என்றும் கூறும் வழக்கம் திருநெல்வேலிப் பகுதியில் உண்டு. "ஐப்பசி திங்களில் நிகழும் திருவிழாக்களில் இவ்வூர்த் தெய்வங்கள் அனைத்தும் பாளையங்கோட்டை ஆயிரத்தம்மன் கோயிலுக்குச் சென்று பாளையங்கோட்டை ஆயிரத்தம்மனுக்கு மரியாதை செலுத்தி வருகின்றனர்" (Ganapathyraman, 1986) கங்கை கொண்டான் கோவில் தலைமையானதெனின் அங்குதான் மரியாதை செலுத்த வேண்டுவது முறை பாளைங்கோட்டை கோவில் முன்னர் மரியாதை செலுத்துவது முறையன்று என்பது குறித்து ஆராய்ந்து வானமாமலை சில செய்திகளைக் கூறுகின்றார்.

கங்கை கொண்டான் கோவிலே தலைமைக் கோவிலாக இருந்தது. வெள்ளையர்கள் காலத்தில் பாளைங்கோட்டை சிறப்பினைப் பெற்ற பின்னர் பாளையங்கோட்டை ஆயிரத்தம்மனும் சிறப்பினைப் பெற்றுவிட்டாள். என்ற இக்கருத்து பொருத்தமாக உள்ளது எனக் கூறியுள்ளார்.

## ஆண் தெய்வ வழிபாடு

பெண் தெய்வ வழிபாட்டினைப் போன்று ஆண் தெய்வ வழிபாடும் தொன்மையானது. ஆண் தெய்வங்களை மக்கள் தங்கள் தேவைகளைத் தெய்வத்தின் மூலம் பெறுதல் வேண்டும் என்று நம்பிக்கையில் வழிபட்டு வருவதை அறியமுடிகிறது. மழை வேண்டல், ஊர்காத்தல், மாடுவளம் போன்ற பல நம்பிக்கைகள் ஆண் தெய்வங்களை வணங்குவதில் வெளிப்படுகின்றன.

மக்களில் சிறந்தோரைப் பிறர் வழிபடுவது மரபாக இருந்து வந்துள்ளது. இந்த வகையில் சிறந்த ஆண் மகன் மக்களால் பாராட்டப்படுதலும், அவனுக்கு நடுகல் எழுப்புதலும் உண்டு. இந்நடுகல் நாளடைவில் ஆண் தெய்வ வழிபாட்டிற்கு வழி வகுக்கின்றது. ஐயனார், சாத்தன், கருப்பசாமி போன்ற ஆண் தெய்வங்கள் இதற்கு நல்ல சான்றுகள் ஆகும்.

### ஐயனார்

திருநெல்வேலிப் பகுதியிலும் தமிழகத்தின் பிற இடங்களிலும் மிகுதியாக வணங்கப்பெறும் ஆண் தெய்வங்களுள் ஐயனார் என்ற சிறு தெய்வம் முதன்மை பெறுகிறது.

தமிழகம் வேளாண்மைத் தனது முதல் தொழிலாகக் கொண்டது. வேளாண்மைத் தொழிலுக்கு அருள் செய்யும் தெய்வமாகத் தமிழக மக்கள் ஐயனாரைக் கருதுகின்றனர். ஐயனார் வேளாண்மைக்கு முதற்காரணமாக விளங்கும் மழையைத் தருபவர் என்பது மக்களது நம்பிக்கை. தமிழகத்தில் விளங்கும் நாட்டுப்பாடல்களில் இதனை,

"மட்டமலை ஐயனாரே

மாவூத்து வேலவரே

மழையை இறக்கிவிடு

மானுடங்க கையெடுக்க"

வேளாண்மைத் தெய்வமாக விளங்கும் ஐயனார் காவல் தெய்வமாகவும் கருதப்படுகிறார். மழையினைத் தரவும், நோய் நொடி வராமல் காக்கவும் உள்ள தெய்வமாகக் கருதப்படுவது போல் ஐயனாரும் நோய் நொடி, பேய், பிசாசு முதலியவற்றைக் காக்கும் தெய்வமாகக் கருதப்படுகிறார். மாரியம்மன் போன்ற சிற்றூர் சிறுதெய்வங்கள் பலவும் ஊரினைக் காக்கும் தெய்வங்களாகக் கருதப்பட்ட போதிலும் அவற்றுள் முதன்மையும் தலைமையும் கொண்டது ஐயனார். "ஊரைக்

காப்பதற்காக ஐயனாருக்கு யானையும், குதிரையும் வாகனமாக அமைந்துள்ளது” (Lakshmana Chettiar, 1973). ஐயனார் கோவில்களில் இன்றும் மண்ணாலான பெரும் குதிரைகளையும், யானைகளையும் காணலாம்.

ஐயனார் திருமேனி தென் தமிழ்நாட்டில் பற்பல முறைகளில் அமைந்துள்ளது. அமர்ந்த முறையில் இடதுகாலை மடக்கி, வலது காலைக் குத்துக் காலாகக் கொண்டு, குத்துக் காலின் மீது வலது கையை நீளமாக வைத்து, அதில் செண்டினையும், இடது கையில் மந்திரக் கோலையும் வைத்துக் கொண்டு ஐயனார் காட்சித் தருகிறார்.

### கருப்பசாமி

தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் வழங்கப் பெறும் கருப்பசாமி திருநெல்வேலிப் பகுதியிலும் மிகுதியாக வணங்கப்பெறும் சிறு தெய்வங்களுள் ஒன்று.

கருப்பசாமியைக் கண்ணனின் அம்சம் என்று சிலர் கூறுகின்றனர். கருப்பன் என்ற தமிழ்த் தெய்வம் வடமொழியில் கிருஷ்ணனாயிற்று என்ற ஒரு கருத்தும் உண்டு. இக்கூற்றினை உண்மையெனக் கொண்டால், “மாயோன் மேய காடுறை உலகம்” என்ற தொல்காப்பியர் காலத்திற்கு கருப்பனின் பழமை செல்கிறது.

தமிழ் முன்னோர்கள் தெய்வத்திற்கு வண்ணங்கள் பற்றியும் பெயரிட்டனர் எனக் கூறப்படுகிறது. இக்கருப்பனைக் கண்ணன் என்பார் பிற்காலத்தவர்கள். புராணத்தில் கூறப்பெறும் கண்ணனுக்கு காப்பது தொழில், கருப்பன் என்ற சிறு தெய்வத்திற்கும் காப்பது தொழில்.

திருநெல்வேலிப் பகுதியில் தேவர் சமுதாயத்தைச் சேர்ந்த மக்களிடையே கருப்பன் வழிபாடு மிகுதியாக உள்ளன. இக்கோவிலின் கொடை நிகழ்ச்சி போன்றவை சுடலைக் கோவில் கொடை நிகழ்ச்சி போன்றே அமைந்துள்ளன.

## கொடை நிகழ்ச்சிகள்

மனிதன் தன் நன்றியுனர்வைத் தான் வழிபடும் தெய்வங்களுக்குக் காட்டுவதில் தொடக்க காலம் முதல் ஆர்வமுடையவனாக இருப்பதைக் காண முடிகிறது. இதன் பின்னணியில் சிறு தெய்வங்களை வழிபடும் மனிதன் கொடை விழாக்களை நடத்தி வருவதில் ஆர்வம் கொள்கிறான்.

தொடக்க காலம் முதல் பல்வேறு வழிப்பாட்டு முறைகளைக் குறிப்பிட்ட சில நாட்களில் மட்டும் நடைமுறைப் படுத்துவதையும் பார்க்க முடியும். இவற்றையே “நாள் வழிபாடு” என்கின்றனர். இதனைப் போன்றே தெய்வங்களுக்கு குறிப்பிட்ட பருவங்களில் குறிப்பிட்ட கொடை நடத்துவதிலும் மக்கள் ஆர்வமுடையவர்களாக இருக்கின்றனர். இவ்வாறு நடைபெறும் கொடைகள் மக்களின் வாழ்விடம், சமூக நிலை, பொருளாதாரச் சூழ்நிலை போன்ற பல்வேறு நிலைகளை அடிப்படையாகக் கொண்டே நடைபெறுகின்றன.

கொடை நடத்துவதில் மக்கள் நிகழ்த்தும் பல்வேறு நிகழ்ச்சிகள் பெண் தெய்வத்திற்கு ஒரு வகையிலும், ஆண் தெய்வத்திற்கு வேறொரு நிலையிலும் நடத்துவதைப் பிரிக்க முடியும். பெண் தெய்வக் கொடை நிகழ்சிகள் அடிப்படையில் செழிப்பைக் குறியீடாக வெளிப்படுத்தும் நிலையில் அமைந்துள்ளன.

ஆண் தெய்வங்களுக்கு நடத்தும் நிகழ்ச்சிகள் காவல், வெறியாட்டம் போன்றவைகளை வெளிப்படுத்தும் நிலையில் அமைந்து இருப்பதைப் பார்க்க முடிகின்றது. இக்கொடை நிகழ்வுகள், இதன் அடிப்படையில் மக்கள் மேற்கொள்ளும் பல்வேறு நம்பிக்கைகள் பற்றிய ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## முடிவுரை

மக்கள் உயரறிவின் மேம்பட்ட சமய ஒழுக்கம் பற்றி அறிய வாய்ப்பு பெறாததாலும் தங்களின் தொழில், வாழ்க்கைநிலை, குடியிருப்பு ஆகியவற்றோடு ஒட்டிய வண்ணம் பழங்காலம் முதல் வழி வழியாகப் பின்பற்றி வந்த மரபுகளாலும் சிறுதெய்வ வழிபாட்டினையே கொண்டிருந்தார்கள் சங்க காலத்தையடுத்துத் தமிழகத்தில் சமய காலம் உருவாக்கியது. சமய காலம் உருவாகியதும், தெய்வங்களிலும் வழிபாட்டு முறைகளிலும் மாற்றங்கள் எழுந்தது. காளி, உச்சினிமாகாளி, பத்திரகாளி, மாரியம்மன், சப்தகன்னியர் தெய்வங்கள் தாய் தெய்வங்களாகவும், ஐயனார், கருப்பன், மாடன், தடிவீரையன், சாத்தன் போன்ற தெய்வங்கள் ஆண் தெய்வங்களாகவும் மக்கள் வழிபட்டு வருகின்றனர். மக்கள் எண்ணங்கள் போல் சிறு தெய்வங்கள் பல்கிப் பெருகினாலும், இவை அனைத்தையும் இந்து சமயம் ஏற்றுக்கொள்கிறது. வழிபாட்டில் தனி மனித உரிமை பிற சமயங்களைவிட இந்து சமயத்தில் மிகுதியானதால்தான் தெய்வங்களும் பல்கிப் பெருகின. இவ்வாறன சிறு தெய்வங்களை நம்பி வாழும் மக்களிடையே பழைய தமிழ்ப் பண்பாடுகளின் கூறுபாடுகள் இன்றும் நிலவி வருவது போற்றுதற்குரியதாகும். சிறு தெய்வ வழிபாட்டில் பழைய பண்புகளைப் பாதுகாத்து வரும் மரபு மிளிர்ந்து காணப்படுவதும் தனிச்சிறப்பாக உள்ளது.

## References


Alex Comfort, (1966) The Nature of Human Nature: An Empirical Case, Londan, UK

Ganapathyraman, S. (1986) Thirunelveli Paguthiyil Sirutheiva Valipadu, Thirumagal Noolagam, Thoothukudi, India

Gowmareeswari, S. (2005) Tholkappiyam Ilampuranar Urai, Saratha Pathippagam, Chennai, India

Kandhaiya, N.C. (2009) Sentamil Agarathi, International Institute of Tamil Studies, Chennai, India.

Lakshmana Chettiar, S.M.L. (1973) Folklore of Tamilnadu, South Indian Book Trust, Madras, India

Nagasamy, R. (1983) Agarathi Nigandu, U.Ve.Sa. Noolagam, Chennai, India

Tamilarasi, M. (2001) Pandi Muniswarar Valipadum Samuthayamum, P.K.M. Pathippagam, Madurai, India.

Vanamamalai, N. (1964) Tamilnattu Padalkal, New Century Book House, Chennai, India



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.


**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License